**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 383/2025**
**வழக்கு சாட்சி PW–7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகேந்திரன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பவுல் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 32 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 08.07.2026.

**(1ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி மாவட்டம் தனிப்பிரிவு குற்ற புலனாய்வு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் ஆலங்குளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 26.03.2023ம் தேதி, 17.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, ஆலங்குளம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி, 17.45 மணிக்கு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த சுடலைமணி என்பவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தை பதிவு செய்து, 18.30 மணிக்கு நிலையம் வந்து அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.89/2023, சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 307, 506(2) இதச – வின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை ஆலங்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர்

பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.09 18:03:57 +0530